உ

# தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் ௰௮ } சுபானு—பங்குனி 1944—மார்ச்சு { மலர் ௰௨

## வருக எம் தலைவ! வாழ்வுறச் சங்கம்.

**த**மிழ் நாட்டில் தமிழ் மக்கட்குத் தனித்தமிழ் உணர்ச்சியையும், நாட்டுப் பற்றையும் விளைவித்துத் தமிழ்மொழி பிறமொழியின் உதவியின்றித் தனித்தியங்கவும் செழித்தோங்கவும் வல்லதென்பதனை உலகிற்கறிவித்துச் சிறந்த பணியாற்றிப் புகழுடன் மிளிர்வது எம் கரந்தைத் தமிழ்ச்சங்கமே யாகும். தமிழர்கள் தங்கள் பெயருக்குமுன் ஸ்ரீமாந், ஸ்ரீமதி, ஸ்ரீ என வடமொழிச் சொற்களைப் பெய்து எழுதிய நிலைமையை மாற்றி இச்சொற்களுக்கு மாருக முறையே திருவாளர், திருவாட்டி, திரு என்ற தனித்தமிழ்ச் சொற்களைப் பெய்து எழுதுமாறும், அங்ஙனம் எழுதுதலையே சிறப்பாகக்கொள்ளுமாறும் தமிழ் மக்கட் கறிவுறுத்தியது எம் **கரந்தைத் தமிழ்ச்சங்கமும்**, சங்கத்தின் சார்பில் வெளிப்போதரும் செந்தமிழ்த் திங்கள் வெளியீடாகிய "**தமிழ்ப் பொழிலு**" மேயாகும். சென்ற ௩௩ ஆண்டுகளாகச் சங்கம் முயன்று உழைத்ததன் பயனே தமிழ் நாட்டில் தமிழ் மொழி உணர்ச்சி இன்று இவ்வளவு சிறந்தோங்கியுளதென்பதை யாவரும் அறிவர். எம் சங்கத்தலைவராய் இலங்கிக் காலஞ்சென்ற **செந்தமிழ்ப் புரவலர், தமிழவேள், இராவுசாகிபு, த. வே. உமாமகேசுவரம் பிள்ளை**யவர்கள் அரிதின் முயன்று திருவையாற்று அரசர் கல்லூரியில் தமிழ் வித்துவான் படிப்பிற்கு வழிகாணவிடின் தமிழ் நாட்டில் இத்துணைத் தமிழ்ப் புலவர்களை யாம் கண்டு மகிழ இயலுமோ? தமிழவேள் தலைமையில் எம் கரந்தைத் தமிழ்ச் சங்கம் தமிழ்மொழிக்கென ஒரு பல் கலைக் கழகம் இருத்தல் வேண்டுமென்று இடைவிடாது நிகழ்த்திய கிளர்ச்சியின்

பயனால் எழுந்ததன்றோ அண்ணாமலைப் பல்கலைக் கழகம்! சில்லா போர்டு, தாலுக்கா போர்டு, பஞ்சாயத்து போர்டு, முனிசி பாலிட்டி எனத் தமிழ்நாட்டிலமைந்த கழகங்கட்குப் பிறமொழிப் பெயர்களை அமைத்துத் தமிழர் வழங்கிய நிலைமையை மாற்றி, இக்கழகங்கட்கு முறையே **நாட்டாண்மைக் கழகம், வட்டாண் மைக் கழகம், ஊராண்மைக் கழகம், நகராண்மைக் கழகம்** என்ற தனித் தமிழ்ப் பெயர்களையமைத்து ஆட்சி முறையில் இப் பெயர்களே பெரும்பாலும் வழங்கும் வண்ணம் செயல் புரிந்தது எம் கரந்தைத் தமிழ்ச் சங்கமேயாகும். சங்கத்தின் பல்வகையாய உறுப்புக்களாயமைந்த **தொடக்கப் பள்ளி, நடுநிலைப் பள்ளி, கல்லூரி, திக்கற்றமாணவரில்லம், இலவச மருத்துவசாலை நூல் நிலையம்** ஆகிய யாவும் சங்கத்தின் உழைப்பால் எழுந்தன வாகும். இவை யாவும் **சாதி மத** வேறுபாடின்றித் தமிழர் எல்லோர்க்கும் பொதுவாகப் பயன்படுகின்றன. இத்தகு உறுப்புக்களையெல்லாம் சங்கத்தினங்கமாய்ப் படைத்துத் தமிழர்க்குத் தந்து காலஞ்சென்ற தமிழவேள் அவர்கட்குத் தமிழ்நாடு நன்றி செலுத்துங் கடப்பாடுடையது. தமிழவேள் காலஞ்சென்றவுடன் முதிர்ச்சியையும், தளர்ச்சியையும் பொருட் படுத்தாது இளைஞருள்ளங்கொண்டு சங்கத்தைத் தாளாண்மை யுடன் தலைமை தாங்கி இரண்டு ஆண்டுகளாகப் புரந்து வந்தவர் **திருவாளர், இராவுசாகிபு, ஐ. குமாரசாமிபிள்ளை** அவர்களாவார்கள். இவர்கள் தமிழ் உணர்ச்சியே உருவாயமைந்தவர்கள் என்பதைத் தமிழர்கட்கு யாம் அறிவிக்க வேண்டியதில்லையாயினும் சில கூறுகின்றோம். **கட்டாய இந்தியைச்** சட்டத்தின் மூலம் நுழைத் துத் தமிழ் மொழிக்கு ஆரிய அமைச்சர் இடுக்கண் விளைத்த காலையில் தமிழர் படை திரட்டி அப்படைக்குத் தலைமை தாங்கித் தமிழ்க்கொடியேந்தி எதிர்ப்பொலி முழக்கித் திருச்சிராப்பள்ளி யிலிருந்து சென்னை வரையிற் படையை நடத்திச்சென்று அரசிய லாரும் பிறரும், தமிழர், மொழிக்காகத் தம் உயிரையும் துரும் பென மதித்துப் போராடுவர் என்பதையறியும் வண்ணம் பெரும் பணியாற்றி வாகைசூடிய பெருமகனார் எம், ஐ. குமாரசாமிப் பிள்ளையவர்களேயாவார்கள்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் தமிழ் பயிலும் மாண வர்க்கு அளிக்கப்பெறும் "வித்துவான்" என்ற பட்டத்தை மாற்றித் தனித் தமிழ்ப்பெயராய "புலவர்" என்ற பட்டத்தை வழங்கும் வண்ணம், அப்பல்கலைக்கழகப் பேரவையில் (senate) சிறந்த முடிபினைக்கொண்டுபோய்த் தமிழ்மொழி பயின்றோர்க்கு வடமொழியிற் பட்டமளித்தல் கூடாதென வாதிட்டவர் எம் தலைவர் அவர்களே யாவார்கள். இவர்கள் கருத்து நம் சங்கம் ஒரு தமிழ்ப் பல்கலைக் கழகத்தைத் தோற்றுவித்து, ஒழுங்குற

நடத்தவேண்டுமென்பதேயாம். "ஆந்திரர் தங்கள் மொழிக் கெனத் தனிப் பல்கலைக்கழகம் கண்டாற்போல, வங்காளிகள் தங்கள் மொழிக்கெனத் தனிப் பல்கலைக்கழகம் பெற்றாற்போல, உசுமானியர் தங்கள் மொழிக்கென உசுமானியப் பல்கலைக்கழகம் கண்டாற்போல, தமிழரும் தங்கள் மொழிக்கென ஒரு தனிப் பல்கலைக்கழகத்தை நம் சங்கச்சார்பில் தோற்றுவித்து நடத்த வேண்டும்என்பதே என் அவாவாகும்;" எனப் பன்முறையும் வலி யுறுத்திக் கூறியுள்ளார்கள். இவர்களுடைய குழந்தை உள்ள மும், கள்ளமில்லா உரையாட்டும் எல்லோருள்ளங்களையும் பிணித்துள்ளன. இவர்கட்குக் கரந்தைக் கழகத்தார் அளித்த வாழ்த்திதழில் "ஐய! தாங்கள் இந்நாட்டில் வதிந்தோர் பலரைத் தோற்றமுறச் செய்தீர்கள்; ஏற்றமுறச் செய்தீர்கள். தாங்கள் தலைமையை விரும்பாது தங்களினும் இளைஞர் பலர்க்கு உளமுவந்து இடமளித்துத் தலைமை தாங்கச்செய்து அவர்கள் தலைமையின்கீழ்த் தாங்கள் உறுப்பினராய் ஒன்றித் தொண் டாற்றிய பெருந்தகைமையினை யாங்கள் எண்ணி எண்ணி, மகிழ்ந்து தங்களைப் பாராட்டுகின்றோம்." என உள்ளவற்றை உள்ளவாறே மொழிந்துள்ளனர். இத்தகு பண்புகள் பலவற் றையும் ஒருங்குபெற்ற எம் தலைவர் இன்று தம்முடைய முதிர்ச்சி தளர்ச்சிகாரணமாகச் சங்கத் தலைவர் பதவியினின்றும் விலகிக் கொண்டு, திருவாளர், இராவுபகதூர், A. Y. அருளாநந்தசாமிநாடார் அவர்களைச் சங்கத்திற்குத் தலைமைதாங்க வேண்டிக்கொண் டார்கள். உறுப்பினர்களும் ஒருமனதுடன் நாடார் அவர்களைத் தலைவராகத் தேர்ந்தெடுத்தனர். நாடார் அவர்கள் சங்க உறுப் பினர் ஒருமனதுடன் தன்னைத் தலைவராகத்தேர்ந்தெடுத்தமைக்கு நன்றி தெரிவிப்பதாகவும், சங்க வளர்ச்சி குறித்துத் தன்னால் இயன்ற தொண்டுகளைச் செய்வதாகவும் உறுதி கூறினார்கள். "இருவேறுலகத் தியற்கை"க்கு மாறாகத் திருவும் அறிவும் செறியப்பெற்ற நம் நாடார் அவர்கள் வள்ளன்மையால் "கொடை வள்ளல்" எனப் பல்லோராலும் போற்றிப் புகழப்பெற்றவர்கள். இம்மையில் என்றும் நிலைத்துநிற்பது புகழ் ஒன்றே எனக்கருதித் தாம் அரிதின் முயன்று ஈட்டிய பொருள்களை அள்ளி அள்ளி எளியவர்களுக்கு வழங்கும் வள்ளன்மை வாய்ந்தவர்கள். இவர்கள் சங்கத்தலைவராய் அமைவதற்குமுன்னரேயே இவர்கள் தலைமையில் சொற்பொழிவாற்ற இடங்கிடைத்தபொழுது, 'ஐய! தாங்கள் கொடையுள்ளத்தால் தங்கள் இல்லில் அமைத்துள்ள தண் ணீர் வழங்கும் தண்ணீர்க் குழாய்களில் தண்ணீர் பிடிப்பான் வேண்டிப் பூக்காரர் தெருவிலிருந்து வறுங்குடம் ஏந்திவரும் மங்கை யர், தங்கள் இல்லிற்குவந்து வறுங்குடம் நிறைந்து வழிய வழியத் தண்ணீர் பிடித்துச் செல்லுதல்போல எம், கரந்தைப் புலவர்கல்லூரி யாகிய வறுங்குடத்தைத் தங்கள் தலைமையில் தங்கள் முன் திறந்து

**வைத்துள்ளோம். இக்கல்லூரியாகிய வறுங்குடம் தங்கள் தலைமை யில் பொருள் நிறைவுற்றுப் புகழ்கொளும்என்று எண்ணுகின்றோம்.'** என யாம் அன்று கூறிய மொழிகளைக் கேட்டோர் யாவரும் கிளர்ந்தெழுந் தார்த்தனர். யாம் அன்று கூறிய வாய்மொழி இன்று வாய்மை மொழியாய் இலங்கப்போதலை யறிந்து மகிழ் கின்றோம். எம் சங்க உறுப்பாய் அமைந்துள்ள தொடக்கப் பள்ளி, நடுநிலைப்பள்ளி, மாணவர் விடுதி முதலிய எல்லா நிலை களினும் பெரும்பொருளை ஆண்டுதோறும் மிகுதியும் வேண்டு வது எம் கரந்தைப் புலவர் கல்லூரியே யாகும். நம் வள்ளல் அருளாநந்தர் சங்கத் தலைவராய் அமைந்தமை, **கரந்தைப் புலவர் கல்லூரிக்கு** ஒரு நிலைத்த நிதியை ஏற்படுத்துதற்கும், கல்லூரி நடத்துதற்கேற்ற ஒரு கட்டிடம் அமைக்கப்பெறுதற்கும் உற்ற நற்குறி என அன்பர்களுக்கு அறிவிக்க விரும்புகின்றோம். வள்ளலையடைந்தோர் வறுமையகன்று நலன்பெற்று வாழ்தல் போல, எம் கரந்தைத் தமிழ்ச் சங்கமும், இன்று, பெருங்கொடை வள்ளல் அருளாநந்தரைத் தலைவராகப்பெற்றுள்ளமையால், இனி வளன்பெற்று, மாட்சிசால் வாழ்வுபெறுமென மகிழ்வுடன் கூறுகின்றோம். எம், மகிழ்ச்சிமீக்கூரலால், **''வருக எம் தலைவ! வாழ்வுறச் சங்கம்''** என வரவேற்று நல்வரவு கூறுகின்றோம். **வள்ளல் அருளாநந்தர்** தலைமை தாங்கி எம் சங்கத்தைப் புரந்து, வண்புகழ்கொண்டு யாம் என்றும் நன்றே வரவேற்க நற்செய லாற்றி நாளும் வாழியரெனத் தமிழ்த்தாயை வழுத்தி வணங்கு கின்றோம்.

**பொழிலாசிரியர்.**

## செய்திகளும் குறிப்புக்களும்.

### கரந்தைத் தமிழ்ச்சங்கம், தஞ்சை.

சங்க உறுப்பினர்களின் பொதுக்கூட்டம் 12—3—44 மாலை 4 மணிக்கு நிகழ்வுற்றது. சங்கத் தலைவர், திரு. **இராவுசாகிபு, ஐ. குமாரசாமிப் பிள்ளையவர்கள்** தலைமை தாங்கினார் கள். 1942—43; 43—44ம் ஆண்டுகளின் கணக்குகளும் சோதனை அறிக்கையும் கூட்டத்திற் படிக்கப்பெற்று உறுப்பினர் எல்லோராலும் ஒப்புக்கொள்ளப் பெற்றன. 1944—45ம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தைக் குறித்துச் சங்க அமைச் சர், **திரு. நீ. கந்தசாமி பிள்ளையவர்கள்** ஒரு சொற்பொழிவாற்றி னார்கள். அச் சொற்பொழிவில் தமக்கிருக்கும் பல அலுவல் களுக்கிடையே சங்க அலுவல்களை நன்கு கவனிக்க இயலாமை யின் தாம் அமைச்சர் பதவியினின்று விலகிக் கொள்வதாகவும், விலகிக்கொள்ளினும் சங்க வளர்ச்சிக்கான தொண்டுபுரியத்தாம் என்றும் கடமைப் பட்டிருப்பதாகவுங் குறிப்பிட்டார்கள்.

மேலும் பேசும் பொழுது **கரந்தைப் புலவர் கல்லூரியின்** வளர்ச்சியில் தாம் நாட்டங் கொண்டுள்ளதாகவும், அதன் வளர்ச்சிவேண்டி, தம் தந்தையார் **திரு. நீலமேகம் பிள்ளை** அவர்களின் நினைவுக்குறியாக ஒரு மாணவற்கும், மன்னார்குடி இயற்றமிழ்ப் புலவர் **ம. நா. சோமசுந்தரம் பிள்ளை** அவர்களின் நினைவுக்குறியாக ஒரு மாணவற்கும், தமிழ்ப்பேரறிஞர் **திரு. பா. வே. மாணிக்கநாயகர்** அவர்களின் நினைவுக்குறியாக ஒரு மாணவற்கும் ஆக மூன்று மாணவர்களுக்கு ஒவ்வோராண்டிற்கும் உணவிற்கெனச் செலவாகுந் தொகை 240 வெண்பொற்காசுகளைத் தாம் கொடுத்துதவ ஒருப்பட்டுள்ளதாகவும், இத்தொகை என்றும் கரந்தைப் புலவர் கல்லூரிக்குக் கிடைத்து வரும்படியான முறையில் நிலைத்த நிதி ஏற்படுத்துவதாகவும், குறிப்பிட்டார்கள். மேலும் சங்கத்தின் தொடக்க நாள் தொட்டுச் சங்கத்திற்குத் தலைமை தாங்கிச் சங்கத்தின் பல்வகையாப உறுப்புக்களும் தழைத்தோங்கப் பெருந்தொண்டாற்றிக் காலஞ்சென்ற **செந்தமிழ்ப்புரவலர், தமிழவேள், இராவுசாகிபு, த. வே. உமாமகேசுவரம் பிள்ளையவர்கள்** பேராலும், தளர்ந்த வயதிலுந் தமிழ்நலம் நாடிக்கரந்தைப் புலவர் கல்லூரிக்குத் தலைமை தாங்கி ஊதியங் கருதாமற் சிறந்த பணியாற்றிவரும் **நாவலர், பண்டித, ந. மு. வேங்கடசாமி நாட்டார்** அவர்கள் பெயராலும், கல்லூரிப் பேராசிரியர், **கரந்தைக் கவியரசு R. வேங்கடாசலம் பிள்ளை** அவர்கள் பெயராலும் மூன்று பரிசுகளை ஒவ்வொன்றும் இருபது இருபது வெண் பொற்காசுகள் வண்ணம் கரந்தைப் புலவர் கல்லூரிக்கென ஏற்படுத்துவதாகவும், இப்பரிசுத்தொகையைக் கல்லூரியில் பயின்று வித்துவான் தேர்வில் முதலில் தேர்ச்சியுறும் மாணவற்கும், சிறந்த நா வன்மையுடன் சொற்பொழிவாற்றும் மாணவற்கும், சிறந்த கவியியற்றும் மாணவற்கும், ஆண்டுதோறும் புலவர் கல்லூரியின் சார்பாக முறையே குறிப்பிட்ட வண்ணம் குறிப்பிட்ட மாணவர்கட்கே, அளிக்கப் பெறுமெனவும், இப்பரிசிற்குரிய தொகையையும் என்றும் நிலைத்த நிதியாக ஏற்படுத்தத் தாம் ஒருப்பட்டுள்ளதாகவும் உறுதி கூறினார்கள். தாம் கூறியவண்ணஞ் செய்வதற்கறிகுறியாக அதுபோழ்தே மாணவர் உணவின் செலவிற்காக 240 வெண்பொற்காசுகளும் பரிசிற்காக 60 வெண் பொற்காசுகளும் ஆக 300 வெண்பொற்காசுகட்குரியமதிப்புத்தாளை முதற்றெகையாகத்தலைவரவர்களிடம் ஒப்படைத்தார்கள். அவர்கள் அளித்த அன்புக் கொடையை உவகையுடன் ஏற்றுக்கொள்வதற் கறிகுறியாக உறுப்பினர் யாவரும் ஆரவார ஒலி எழுப்பி ஆதரவினைப் புலப்படுத்தினார்கள். அவர்கள் அளித்த கொடையினை அன்புடன் ஏற்றுக்கொண்ட சங்கத்தலைவரவர்கள் அமைச்சர் அவர்கள்

உளப் பண்பினைப் பாராட்டி உரைத்ததோடு, தாமும் கரந்தைப் புலவர் கல்லூரி மாணவர் ஒருவற்கு ஓராண்டிற்கு உணவிற் கெனச் செலவாகுந் தொகையைக் கொடுத்துதவுவதாகவும், அத் தொகையுங் கல்லூரிக்கு நிலைத்த நிதியாக என்றும் கிடைத்துவர ஏற்பன செய்வதாகவும் உறுதிகூறினார்கள். தலைவரவர்கள் மேலும் பேசும் பொழுது இதுபோது பூண்டி பெருநிலக் கிழவர் **திரு. அ. வீரையா வாண்டையார்** அவர்கள் மாணவர் இவருக்கும், மதுரை திரு. இ. **மா. கோபாலகிருட்டினக் கோன்** அவர்கள் மூவருக்கும், யாழ்ப்பாணம் பரமேசுவரக்கல்லூரிமுதல் வர் S. **நடேசப்பிள்ளை அவர்கள்** இருமாணவருக்கும், கிழக்கு மருதூர் T. K. **நாராயணசாமி நாயுடு அவர்கள்** ஒரு மாணவற் கும் ஆண்டுதோறும் செலவாகுந் தொகையினை அளித்து வருகின்றனர். இவர்கள் செயலைப் பின்பற்றி இந்நாட்டிலுள்ள ஏனைய செல்வர்களும் மற்றைய மாணவர்களுக்குச் செல வாகும் பொருளைத் தாங்கள் தருவதாக விரும்பி ஏற்றுக் கொள் வார்களானால் கரந்தைப் புலவர் கல்லூரி நன்கு வளர்ந்தோங்கு மெனவும் குறிப்பிட்டார்கள். மேலும் பேசும்பொழுது தாம் வயது முதிர்ச்சியின் காரணமாகத் தளர்ச்சியடைந்துள்ளதாக வும், தளர்ந்த வயதில் தம்மாலான தொண்டுகளைச் சங்க வளர்ச் சியின் பொருட்டு ஏனைய அன்பர்களுடன் உடனின்று செய்யக் கடமைப் பட்டுள்ளதாகவும், இனிச் சங்கத் தலைவராய் வருகின்ற வர்கள் இராவுபகதூர், A. Y. **அருளானந்தசாமி நாடார்** அவர்கள் எனவும், அவர்கள் தலைமையின்கீழ்ச்சங்கமும், **கரந்தைப் புலவர் கல்லூரியும்**, ஏனைய உறுப்புக்களும் நன்கு தழைத்தோங்குவதற் குரிய வாய்ப்புகள் இருக்கின்றனவென்றும், அவர்கள் தடை சொல்லாமல் சங்கத் தலைமைப் பதவியை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்றும் வேண்டிக் கொண்டார்கள். பின்னர் நிறைவேற்றுக் கழகத்தார் தேர்வும் கணக்காய்வார் தேர்வும் நிகழ்வுற்றன. கீழ்க்குறிப்பிட்ட அன்பர்கள் முறையே தேர்ந்தெடுக்கப் பெற்றனர். **தலைவர், இராவுபகதூர்,** A. Y. **அருளானந்தசாமி நாடார் அவர்கள். அமைச்சர்,** M. **வரதராசன் அவர்கள்** B. A., B. L., **பொருளாளர்,** S.A. **சாம்பசிவம் பிள்ளையவர்கள்.** நிறைவேற்றுக்கழக உறுப்பினர் கள்: **இராவுசாகிபு, ஐ. குமாரசாமிப் பிள்ளை அவர்கள்** B. A., **திருச்சி. வழக்கறிஞர், திரு. டி. பி. வேதாசலம் அவர்கள்** B. A., B. L., **நாவலர், பண்டித, ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள். வித்துவான், திரு. அ. வடிவேல் சோழகர் அவர்கள்.** கணக்காய் வோர்: **திரு.** V. K. **அருணசலம் பிள்ளையவர்கள்.** இத்தேர்வு நிகழ்ந்தவுடன் **நாவலர், பண்டித, ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள்** அனைவருக்கும் வாழ்த்துக்கூறு முகத்தான் சில சொற் களைக் கூறினார்கள். "தலைவரவர்களே! இங்கு குழுமியுள்ள

அன்பர்களே! காலஞ்சென்ற **தமிழவேள் த. வே. உமாமகேசுவரம் பிள்ளையவர்கள்** உடல் பொருள் ஆவி மூன்றையும் இச்சங்கத்திற்கே ஒப்பித்துச் சிறந்த தொண்டாற்றினமையான் எல்லாருள்ளங்களையும் கொள்ளை கொண்டனர். இச் சங்கத்தின் புகழ் நாடு எங்கும் பரவியுள்ளது. தமிழவேள்பால் அன்புடையார் அனைவரும் சங்கத்தை நன்கு வளர்த்துவரக் கடமைப் பட்டுள்ளனர். இத்தேர்வு குறித்து ஒருவரும் வேறுபாடு கருதக்கூடாதென வேண்டிக் கொள்ளுகிறேன். அரசியலில் கவர்னர், வைசிராய், முதலியோர்களை அரசாங்கம் குறிப்பிட்ட காலமட்டும் பதவியில் வைத்திருந்து அப்பதவியின் கால அளவு முடிந்தவுடன் அவர்களைத் திருப்பி அழைத்துக்கொண்டு வேறொருவரை அப்பதவியில் அமர்த்தல் அவர்கள் தகுதியின்மையாலன்று; பிறருக்கும் அப்பதவிகளைத் தந்து ஊக்கமூட்டிப் பயிற்சியளித்தற்கேயாம். அது போன்றே இன்றும் இளைஞர்களாய் உள்ள அன்பர்கள் தலைவராகவும், அமைச்சராகவுந் தேர்ந்தெடுக்கப் பெற்றுள்ளனர். சங்க அமைச்சராயிருந்து தொண்டாற்றிய நம், அன்பர் **திரு. நீ. கந்தசாமிப் பிள்ளையவர்கள்** இவர்களுடன் ஒத்துழைத்துச் சங்கத்தை நன்கு ஓம்பி வளர்த்துவர வேண்டுமென வேண்டிக்கொள்ளுகிறேன்." என **நாவலரவர்கள்** கூறிமுடித்தார்கள். பின்னர், சங்கத்தார் தம்மை ஒரு மனதுடன் தலைவராகத் தேர்ந்தெடுத்தமைக்கு நன்றியறிவைத் தெரிவித்துக்கொள்வதாகவும், சங்க வளர்ச்சிக்குரிய தொண்டுகளைத் தம்மாலியன்றவரைச் செய்வதாகவும், சங்க அன்பர்கள் தம்முடன் ஒத்துழைக்க வேண்டுமெனவும், தலைவர், **A. Y. அருளாநந்தசாமி நாடார் அவர்கள்** குறிப்பிட்டார்கள். பின்னர், அமைச்சர் **எம். வரதராசன்** அவர்கள் தம்மைச் சங்க உறுப்பினர்கள் ஒரு மனதுடன் அமைச்சராகத் தேர்ந்தெடுத்தமைக்கு நன்றியறிதலைத் தெரிவிப்பதாகவும், சங்க வளர்ச்சிக்கான காரியங்களில் தம்மாலியன்ற தொண்டினை மேற்கொண்டு செய்வதாகவும், சங்க உறுப்பினர்கள் யாவரும் தம்முடன் ஒத்துழைக்க வேண்டுமெனவும், குறிப்பிட்டார்கள். இத்துடன் கூட்டம் முடிவுற்றது.

---

## போளூர், தமிழ்ச் சங்கத் திறப்பு விழா.

இவ்விழா (13—2—44)உ ஞாயிற்றுக்கிழமை தமிழ்ப் பேராசிரியர் உயர்திரு. திரு. வி. கலியாணசுந்தரனார் அவர்கள் தலைமையில் சோமநாதீச்சுரர் திருக்கோயிலில் சிறப்பாக நிகழ்ந்தது. சுமார் ஈராயிரம் மக்களுக்கு மேல் குழுமியிருந்தனர். காலையில் ஊர்வலத்தில் தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழித்

தது. திரு. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள் B. A., L. T., தமிழ்ச் சங்கத்தைத் திறந்துவைத்து அரியதொரு சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். இச்சங்கம் வாரந்தோறும் நடத்தவிருக்கும் திருக்குறள் வகுப்பை இவ்வூர் தாசில்தார் திரு, தியாகராசச் செட்டியார் அவர்கள் B. A., திறந்துவைத்தார்கள். போளூர் போர்டு உயர் பள்ளித்தலைமைத் தமிழாசிரியரும், இச்சங்கத்தின் ஆசிரியருமான திரு. **வித்துவான். வே. ஐயா நாயக்கர்** அவர்கள் திருக்குறள் பாடம் தொடங்கி முதல் குறளை நடத்தினார்கள்.

ஆசிரியர், திரு. அ. வரதஞ்சைய பிள்ளை அவர்கள், பண்டித திருமதி. நாராயணி அம்மையார் அவர்கள், மயிலை திருமதி காஞ்சனமாலை அம்மையார் அவர்கள் ஆகியோர் முறையே "வள்ளுவர் காட்டிய மக்கள் வாழ்க்கை" "திருக்குறள் மாண்பு" "அன்பு" என்ற பொருள்கள் பற்றிச் சொற்பொழிவுகள் நிகழ்த்தினர். இம் மாவட்டத்தில் இவ்விழா தமிழுணர்ச்சியை உண்டாக்கியுள்ளது.

சங்க ஆதரவில் வாரந்தோறும் திருக்குறள் வகுப்பும் வித்வான் வகுப்பும் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இவ் விழாவில் சைவசித்தாந்த மகாசமாஜம் நடத்தும் "இளஞ்சைவப் புலவர்" தேர்வில் வெற்றிபெற்ற திரு. அ. சங்கரநாராயணன் அவர்கட்குத் தலைவர் அவர்களால் பட்டம் வழங்கப் பட்டது.

இவ்வாண்டிற்குத் திரு. மு. த. துரைசாமி செட்டியார், தலைவராகவும், திருவாளர்கள். ரா. பற்குணப் பிள்ளை, ம. சிதம்பரம் இருவரும் செயலாளர்களாகவும், பலர் செயற்குழுவினராகவும் தேர்ந்தெடுக்கப் பெற்றனர்.

**ரா. பற்குணன்,**
*செயலாளர், தமிழ்ச் சங்கம், போளூர்.*

(262-ம் பக்கத்தின் தொடர்ச்சி.)

ஆகவே சமூகத்திலே புதிய புதிய கருத்துக்கள் தோன்றும் போது பழையகருத்தைக்கொண்ட நாடகங்களே நடிக்கப்பெற்று வந்தால் பார்ப்பவர்கட்கு மன அமைதி ஏற்படுவதில்லை. கருத்து மாற்றமடைவதுபோல நாடகங்களும் புதிது புதிதாக மாற்றமடைய வேண்டும், வாழ்க்கையை விளக்கும் நாடகங்களை ஆயிரக் கணக்கில் வெளியிட இடமிருக்கிறது. **வறுமைஇருக்கும் வரையில் கலைகூடத் தேவையில்லையென்றுயான் கூறுவேன்.** ஆகவே நாடகத் தொழிலாளரின் நலங்களைக் கவனிக்கவேண்டும். சீர்திருத்த நாடகங்கள் நடத்தப்பெறல்வேண்டும். இந்தமாநாட்டை இவ்வளவு நன்ருக நடத்திய நண்பர்களுக்கு என் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

# சிறு சோறு.

வித்துவான். வே. வேங்கடராஜுலுரெட்டியாரவர்கள்,
பல்கலைக் கழகம், சென்னை.

## 1. கரு.

இறையனூர்களவியலுரையில், நூற்குப் பாயிரம் இன்றியமையாததென்பதைக் கூறுமிடத்தில், 'கரு அமைந்த மாநகர்க்கு உரு அமைந்தவாயின் மாடம் போலவும், அளப்பரிய ஆகாயத்திற்கு விளக்கமாகிய திங்களும் ஞாயிறும் போலவும், தகைமாண்ட நெடுஞ்சுவர்க்கு வகை மாண்ட ஓவியம் போலவும் என்பது' என்று கூறப்பட்டுளது. ஈண்டு, மாநகர்க்கு அமைந்த கரு யாது என்பதை நோக்குவோம்:

கரு என்னுஞ் சொற்குத் தமிழ்லெக்ஸிகனில் 16 பொருள் எழுதப்பட்டுள. அவற்றுட் பன்னிரண்டாமதாக அஸ்திவாரம் (Foundation, basement) என்பது காண்கின்றது. அஸ்திவாரம் எல்லாவீடுகட்கும் உளதாகலின், மாநகர்க்குரிய சிறப்புப் பொருளாதல் இல்லை. ஈண்டு மாநகர் என்றது அரசன் கோயிலைக் குறிப்பது. அரசன் கோயிலிற் கரு அமைந்திருக்கும் என்பது,

'கருவொடு பெயரிய காண்பி னல்லில்'

என்னும் 'நெடுநல்வாடை' யடிக்கு, 'புதைத்த கருவோடே பெயர்பெற்ற காட்சிக்கினிய நன்ருகிய இல்' என்று ஆசிரியர் நச்சினூர்க்கினியர் எழுதியிருக்கும் உரையினுல் அறியலாகும். இது,

'புதிய கோயிலுண் டதுவி ளம்புவாம்'

என்று தொடங்கி,

'வட்ட வெண்குடைச் சென்னி மானதன்
வாளின் வாயினுன் மறலி வாயினிற்
பட்ட மன்னர்தம் பட்ட மங்கைமார்
பணிமணித்திருக் கருவி ருத்தியே'

'துவர்நிறக் களிற் றுதிய ரேவலிற்
சுரிகை போர்முகத் துருவ நேரெதிர்த்
தமர்நிணத்தொடக் குருதி நீர்குழைத்
தவர்கருந்தலை சுவர டுக்கியே'

என்று கூறியுள்ள கலிங்கத்துப்பரணிச் செய்யுளால் வலியுறும். இவற்றுள், 'மன்னர்தம் பட்டமங்கைமார் பணிமணித்திருக் கரு விருத்தியே' என்னும் அடியினல், பகையரசர்தம் பட்டத்துத் தேவியரின் பணிமணிகள் இக் கோயிற்குக் கருவாக அமைக்கப் பட்டன என்பது அறிதற்பாலது. கடவுட்கோயிற்குக் கரு அமைப்பதுபோன்று அரசன் கோயிற்குங் கரு அமைப்பது உண்டென்பது நெடுநல்வாடையினுல் அறிந்தாமன்றே! கல்லிற் சமைத்த கடவுட் படிமத்தைப் பிரதிட்டை செய்யும்பொழுது, பீடக்கல்லில் ஆக்கிய குழியில் பலவகைப் பொன்னுங் காசும் இடும் வழக்கினைப் பலரும் அறிவர்.

இக் கூறியவற்றுல், 'கரு அமைந்த மாநகர்' என்னுமிடத்தில் கரு என்பது அரசன்கோயிற் கட்டடத்தின் கடைகாலில் (வானத்தில்) அமைக்கும் பொன் மணி முதலியனவாகும் என்பது அறியலாகும். '**புதைத்த கருவோடே** பெயர் பெற்ற' என்னும் நச்சினார்க்கினியருரையை நோக்கின், கடைகாலிற் புதைத்த கருவாகிய பொருள் காரணமாக அக் கட்டடத்திற்குப் பெயர் வழங்குதல் உண்டு என்பது புலனுகும். ஆகலின், 'வெள்ளியம்பலம்', [1] 'வெள்ளிமாடம்' என்னும் பெயர்கள் புதைத்த கருவினுல் வந்தவை என்று கொள்ளுதல் வேண்டும். 'வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதி' என்னுந் தொடரில் வெள்ளியம்பலம் என்பது அரசன்கோயிலையே குறிப்பதாகும். மதுரையரசருளொருவனுகிய பெருவழுதி அம்மதுரையில் சிவபெருமான் கோயிலாகிய வெள்ளியம்பலத்தில் இறந்தான் என்பது பொருந்துமா, அவன் வெள்ளியம்பலம் என்னுந் தன்னரண்மனையில் இறந்தான் என்பது பொருந்துமா என்று கருதுதல்வேண்டும். சிலப்பதிகாரத்தில் வந்துள்ள வெள்ளிமாடம் என்பதில் இத்தகைய ஐயம் சிறிதும் இல்லை.

கன்னடமொழியில், 'கருமாடம்' என்னுஞ் சொல் வழங்குகின்றது. அஃது அந்தப்புரத்தைக் குறிப்பது என்கின்றனர். அப்பொருள், நெடுநல்வாடையில் உள்ள 'கருவொடு பெயரிய இல்'லிற்கு அமையும். அதனைக் 'கருப்பக்கிருகம்' என்று வழங்குதல் உண்டென்பது நச்சினார்க்கினியருரையினுல் தெரிகின்றது.

---

1. 'விளங்கிலவந்தி **வெள்ளி மாடத்து**' என்பதுசிலப்பதிகாரம் 25:4.

## 2. மாயோள்.

மாயோள் என்னுஞ் சொல் குறுந்தொகை நற்றிணை முதலிய பழைய நூல்களிற் பலவிடங்களில் வந்துளது. அச்சொற்கு 'மாமைநிறத்தையுடையவள்' என்று மகாமகோபாத்தியாய, டாக்டர், உ. வே. சாமிநாதஐயரவர்களும் பின்னத்தூர், திரு. அ. நாராயணசாமி ஐயரவர்களும் பொருள் எழுதியிருக்கின்றார்கள். குறுந்தொகையிலுள்ள,

'யாயா கியளே மாஅ யோளே
மடைமாண் செப்பிற் றமிய வைகிய
பெய்யாப் பூவின் மெய்சா யினளே
பாசடை நிவந்த கணைக்கா னெய்தல்
இனமீ னிருங்கழி யோத மல்குதொறுங்
கயமூழ்கு மகளிர் கண்ணின் மானுந்
தண்ணந் துறைவன் கொடுமை
நம்மு ணாணிக் கரப்பா டும்மே'

என்னுஞ் செய்யுளில் வந்துள்ள மாயோள் என்னுஞ் சொற்கு, மாமை நிறத்தையுடையவள் என்னுமளவிற் கூறும் பொருள் சிறப்புடையதாயில்லை. 'மாமைநிறத்தையுடையவள் எந் தாயானாள்' என்று கூறுதலில் சிறப்பு என்னை? இனி, அகநானூற்றில் 62-ஆஞ் செய்யுளில் உள்ள,

'மடவது மாண்ட மாஅ யோளே'

என்னும் அடிக்கு, 'மடப்பத்தாற்சிறப்புற்ற **கரியளாகிய** தலைவி' என்று எழுதியிருக்கும் பொருள் சிறிதுஞ் சிறப்பதன்று. 'அக் **கறுப்பி** என் ஆகத்திற் பொருந்திக்கிடந்தனள்' என்பதில் பொருட்சிறப்பு யாதோ, விளங்கவில்லை. இவ்விடங்களிற் சிறக்கும் பொருள் யாது என்று நோக்கவேண்டுவதாயுளது. மேலைக் குறுந்தொகைச்செய்யுளை நோக்குவோம். அச்செய்யுள், வாயில்கள் தம்முட் கூறுவதாக அமைந்துளது. 'தலைவியைச் சுட்டி ஒருவர் ஒருவருக்கு உரைப்பார்போல வாயில்கள் தம்முட் கூறவும் பெறும். அவையுந் தலைவி கேட்பன. இது பாடினி பாணற்கு உரைத்தது' என்று பேராசிரியரும், நச்சினார்க்கினியரும் எழுதியிருப்பது அறிதற்பாலது. இந்த மாயோள் எந் தாயாயினாள் என்று கூறுதற்குக் காரணமாக,

'தண்ணந் துறைவன் கொடுமை
நம்மு ணுணிக் கரப்பா டும்மே'

என்பது கூறப்பட்டுளது. தன் தலைவனது கொடுமையைத் தன் றோழி முதலியோர் அறிதற்கும் நாணி அதனை மறைக்கின்றாள் என்றதனால் தலைவியின் அறிவின் மாட்சியும் பெருந்தகைமையும் விளங்குவனவாகும். வயதின் மிக்க மகளிருள் அறிவிற் சிறந்தவர், தம்மைச் சார்ந்தவருக்கும் அவமதிப்பு நேராதவாறு காத்துக் கொள்ளும் இயல்பினராயிருப்பர்; அவ்வறிவின் மாட்சி இத் தலைவியினிடம் அமைந்திருத்தலின் இவளை 'யாய் ஆகியள்' என்று சிறப்பித்துக் கூறினாள். ஈண்டு, மாயோள் என்பதற்கு மாமைநிறமுடைய பருவத்தினள்; இளையள் என்று பொருள் கொள்ளுதல் வேண்டும். மாமை—மாந்தளிர் போன்ற நிறம் என்பர். அது காமநுகர்ச்சிக்குரிய பருவம் நிரம்பிய மகளிர்க் குண்டாவதோர் ஒளிநிறமாகும். இனி, கருநிறம் என்று கொள்ளினும் அந்நிறந் தோன்றும் பருவத்தைக் கொள்ளுதலே அமைதி. வடமொழியில்,

'ஸ்யாமா யௌவன மத்யஸ்த்தா'

என்பது நோக்கத்தக்கது. (கருநிறத்தின் பெயராகிய) ஸ்யாமா என்னுஞ் சொற்கு நட்டிளம்பருவத்தினள் என்னும் பொருள் உளதாதல் இவ்வாக்கியத்தினால் அறியலாகும்.

'க்ருஷ்ணே நீலாஸித **ஸ்யாம** கால ஸ்யாமல மேசகா',
என்னும் நிகண்டினால், ஸ்யாம என்பது கருநிறத்தின் பெயராதல் அறியப்படும்.

இனி, மாயோள் என்னுஞ் சொற்கு மாமைநிறமுடைய இளையோள் என்று பொருள்கொண்டால் அது யாண்டுஞ் சிறப்பதாயுளது. மேலைக் குறுந்தொகைச் செய்யுளை நோக்குக. இளையோள் மெய் சாயினள்; தண்ணந்துறைவன் கொடுமை நாணிக் கரப்பாடும், ஆகலின் வயதுமிக்க தாயாயிருக்கிறாள்' என்பது பொருளாகும். 'இளையோள் யாயாகியள்' என்பதற்கு தலைவன் கொடுமையை நாணி மறைத்தல் காரணமாகின்றது.

இவற்றால், மாயோள் என்னுஞ் சொற்கு (மாமை நிறத்தை யுடைய) இளையோள் என்னும் பொருளே சிறப்பதாதல் அறியலாகும்.

---

# பொருநராற்றுப்படை

புலவர், வி. அ. அரங்கசாமி அவர்கள்,
விரிவுரையாளர், கரந்தைப் புலவர்கல்லூரி, கரந்தை.

**ச**ங்க மருவிய துங்கப் பாக்களை, பத்துப் பாட்டு எட்டுத் தொகை பதினெண் கீழ்க்கணக்கு என முப்பெரும் பிரிவுகளாக நந்தமிழ்ச் சான்றோர் பகுத்துள்ளமை உரையிடை மருவும் உண்மை நோக்கி உணரற்பாற்று. இவ்வமைப்பினை நோக்குழி முதற்கண் புலவர் பலரும் உலகியல் வழக்கினைப் பாவின்கண் அமைக்க எண்ணி நீண்டதோர் நெடும்பாட்டினாற் றெளிவித்தாரென்பதூஉம், பின் குறுகிய அடிகளையுடைய தொடையாற் தொடுத்தார் என்பதூஉம், அதன்பின்னர்த் தனித்தனிப் பாவின்றி நூல் வடிவில் யாப்புக்களை யாத்தனர் என்பதூஉம் அறியப்படுகின்றன. அங்ஙனம் எழுந்த பாட்டுக்களில் நெடும் பாட்டினைத் தொகுத்துப் பத்துப் பாட்டெனவும், தனித்தனி யமைந்த செய்யுள் பலவற்றைத் தொகுத்து எட்டுத் தொகையெனவும், பின்னர் நூல்களாக யாத்தவைகளைக் கீழ்க் கணக்கு எனவும் பெயர் தந்தனர். இவை கீழ்க்கணக்கு எனவே, மற்றைய பதினெண் நூல்களும் மேற்கணக்கு எனப் பெயர் போந்தது, வெண்டாமரை என்று கூறியவழி செந்தாமரை ஒன்று உண்டென்பது போல முடிந்ததென்க. மேற்கூறிய முப்பெரும் பிரிவுகளுக்கும் காரணக் குறியமைந்தமை நோக்கற் பாற்று. அவற்றுள் பத்துப்பாட்டு என்பது பத்துப்பாக்களை யுடையது. மேற்கணக்கு எனச் சுட்டியவழி நூல் போன்றும், பத்துப்பாட்டு எனப் பகர்ந்தவழி பாவியல் போன்றும் அப்பத்தும் நிற்கின்றமை காண்க. பாட்டு என்பது சேட் புலத்திருந்த காலத்தும், ஒருவன் எழுத்துஞ் சொல்லும் தெரியாமற் பாடமோதுங்கால் அவன் சொல்லுகின்ற செய்யுளை விகற்பித்து இன்னசெய்யுளென்று உணர்வதற் கேதுவாகிப் பரந்து பட்டுச் செல்வதோர் ஓசை என்பர் பேராசிரியரும் நச்சினார்க்கினியரும். பாவென்பதும் பாட்டென்பதும் ஒருபொருட் கிளவியாம். இங்ஙனம் அமைந்த ஓசை நான்கு கூற்றதாகி வருமெனவும் அவற்றுள் ஆசிரியம் ஒன்றென்பதும்

> "ஆசிரியம் வஞ்சி வெண்பாக் கலியென
> நாலியற் றென்ப பாவகை விரியே"

என்ற தொல்காப்பியர் கூற்றுன் தெளிவுறும். இதனுள் ஆசிரியப்பா, வெண்பா, கலிப்பா, வஞ்சிப்பா என்ற முறை, பிறழ்ந்

துள்ளமையால், ஆசிரியம் வெண்பா என்ற இரண்டுடனே, முறையே வஞ்சியும் கலியும், விரவிவருமென்பதும் ஆசிரியம் வெண்பா இரண்டுமே சிறப்புடையன என்பதும் அறியப்படு கின்றன. அஃது

"ஆசிரிய நடைத்தே வஞ்சி ஏனை
வெண்பா நடைத்தே கலியெனமொழிப"

என்ற நூற்பாவான் விளங்கித்தோன்றும். இங்ஙனம் சிறப் புடைப்பாவாகிய ஆசிரியப்பாவால் ஆக்கப்பட்டுத் தன்னலங் கருதாத் தமிழரின் சீரிய பண்பினை எடுத்துரைக்கும் பத்துப் பாட்டுள் இரண்டாவதாக அமைந்துள்ளது நந்தமிழ் மகனும் பொருவிறந்தானுய பொருநன் வழிப்படுத்தும் பொருநராற்றுப் படை. இது வஞ்சியடிகள் விரவப்பெற்ற ஆசிரியப்பாவால் யாக்கப்பட்டமையின் மேற்கூறிய இலக்கணத்திற்கு ஏற்புடைத் தாதல் காண்க. பத்துப்பாட்டுக்களையும் முறைபடக்கூறும் வெண்பாவருமாறு :—

"முருகு பொருநாறு பாணிரண்டு முல்லை
பெருகு வளமதுரைக் காஞ்சி—மருவினிய
கோலநெடு நல்வாடை கோல்குறிஞ்சிப் பட்டினப்
பாலை கடாத்தொடும் பத்து."

இனி முதற்கண் ஆற்றுப்படையின் தனிப்பெருஞ்சிறினையும், அது தமிழிற்கே உரிய தகவினையும் கூறி, முன்பு பொருநன் இயலினையும், அதற்கமைந்த துறைக்குரிய உரைக்கூறுபாடுகளை யும் எடுத்தியம்புவாம். ஆற்றுப்படை என்பதனை ஆறு + படை எனப்பிரித்து, ஆறு-வழி படை-படுத்துதல், எனப்பொருளாகி வழிப்படுத்துதல் எனப் பொருள் படுதல் காண்க. இனி பொருநன் என்பதனை பொருந்—அன் எனப்பிரித்துப் பொருள் காணின் பொருந்துதல் என்றும் ஒத்தல் என்றும் சாதிப்பெயரைக் குறிப் பது என்றும், கொள்ள இடமுண்மை காண்டும். அது,

"வேற்றுமைக்குக்கெட அகரம் நிலையும்"

என்ற தொல்காப்பியச் சூத்திரத்து பொருந் என்பது சாதிப் பெயரும், பொருந்துதல் என்னும் வினைப்பெயருமாம் என்ற நச்சினார்க்கினியர் உரையானும்,

"நவ்விறு தொழிற்பெயர்க் கற்றுறல் வழியே"

என்ற நன்னூற் சூத்திரத்து, பொருநுதல், ஒருவர் மற்றொருவர் போல வேடங்கொள்ளும் பொருநரது தொழிலாதலின் ஒத்தல் என்னும் பொருட்டு என்ற சிவஞான முனிவர் கூற்றானும் தெளி வுறும். மற்றொருவர் போன்று கருவிகொண்டு கூத்தியற்றும் பொருநன் தான்பெற்ற பெருவளத்தைத் தன்னெதிர் வறுமை

யோடு வந்த தன் இனத்தானுக்கு அறிவுறுத்திப் பெறும்படி வழிப் படுத்துகின்றான். இங்ஙனம் வழிப்படுத்துமியல் 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' "யாதுமூரே யாவருங்கேளிர்" என்ற தமிழர்களின் தனிப்பெருங் கொள்கையினை நிலை நாட்ட எழுந்ததோர் நூலென்று கொள்வதன்றி வேறு மொழிக்கும் ஏற்றி,பொதுப்படக்கிளக்கும் புன்மையினைக்கொள் ளற்க. இதுபோன்று தமிழில் உள்ள தூது முதலியவற்றைக் கூறின், சந்தேசம் என வேறுமொழியினும் இச்சிறப்பு உண் டெனக்கோடும் பெரியோரும் ஆற்றுப்படைக்கு வேறுபெயர் வேறு மொழியிலுளதாக இதுகாறுங் கூறவில்லை. ஆயின், இனி முத்து, முக்தா என்ற வடமொழிச் சிதைவென்று கூறும் பெரி யோரும், கற்பு தமிழ்ச் சொல்லன்றென்றும், காரணம் என்ற வடசொற்குத் தமிழ்ச் சொலின்மை கண்டோம் என்றும் நுவலும் அறப்படித்த ஆன்றோரும், பழம் என்பது பலன் என்ற வட மொழிச்சிதை வென்று பகரும் மாண்புடையோரும், திருப் பழனம் என்பதை திருப்பயணமாக்கி, இலக்குமி இவ்வூரி னின்றும் யாத்திரை செய்த வரலாறு மக்கட்குப் புலப்படுவான் வேண்டி, 'ஸ்ரீயாத்திரா புராணம்' என நூல் யாத்தமை போன்று ஆற்றுப்படைக்கும் அரும் பெயர் ஒன்று புனைந்து நூல் செயயவும் முற்படுவர் என மொழிதல் மிகையாகாது. தமிழினம் வேற்றினம் போன்று தானேபெற வேண்டுமென்னும் பேதைமை இன்மை உடைத்தாதல் ஆற்றுப் படை நுவலும் நூல்களால் தேற்றமுறும்.

இனி உலகியலில் ஓரினத்தார் தான்பெறும்பேற்றை பிறர்க் கறிவுறுத்தாது சென்று வருவதும், ஏனையோர் அங்ஙனமின்றி மாறுபாட்டு நிற்றலும், கண்டோர் கூறும் கழிபெருவியத்தகு செயலாம் என்க. இத்தகைய தனிப்பெருஞ் சிறப்பினைத்தரும் ஆற்றுப்படை, தமிழியல் கிளக்கும் தகை சால் நூலாம் தொல் காப்பியத்து,

"கூத்தரும் பாணரும், பொருநரும் விறலியும்
ஆற்றிடைக்காட்சி உறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச்
சென்று பயனெதிரச் சொன்னபக்கமும்"

எனக் கூறும் துறைக்குப் பொருத்தமுடைத்தாதலையும் ஓர்ந் துணர்க. ஆயின் இதற்கு உரைகண்ட பெரியார்களுள் உரை யாசிரியரும், நச்சினார்க்கினியரும் தம்முள் மாறுபடக்கொண்டு வேறுபடப்புகல்வர். உரையாசிரியர் எனப் பெயர்பெற்ற இளம் பூரணர், தொல்லர் கூறிய நூற்பாவின் நெறியோடு ஆற்றொ

மூக்காக, கூத்தராயினும், பாணராயினும் பொருநராயினும் விறலியாயினும் நெறியிடைக் காட்சிக் கண்ணே எதிர்ந்தோர் உறழ்ச்சியால் தாம் பெற்ற பெருவளன் நுமக்குப் பெறலாகும் எனச் சொன்னபக்கமும் எனப் பொருளெழுதிச் சென்றனர். நச்சினார்க்கினியரோ, அங்ஙனமின்றி, கூத்தரும்பாணரும்பொருநரும் விறலியும், பெற்றபெருவளம் பெறாஅர்க்கறிவுறீஇச் சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும் எனவும், ஆற்றிடைக்காட்சியுறழத் தோன்றிப் பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச் சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும், எனவும் பிரித்து இலக்கியநெறிக்கு ஏற்பப் பொருளெழுதிச் சென்றனர். அங்ஙனம் பிரித்துப் பொருளெழுதியமைக் குரிய முதல் முருகாற்றுப்படை என்ற நூற்கு இலக்கணம் வகுப்பான் வேண்டி என்க. இதுபோன்றே தொல்காப்பியத்துள் பல்லிடங்களிலும், இலக்கியத்திற்கு இலக்கணம் தருவான் வேண்டி உரை வகுத்தனர், வெட்சித்திணையிற் கூறும் துறைகளை இளம்பூரணர் ஒன்றெனக் கூறவும், இவர் இரண்டாகக் கொண்டுகூறியுள்ளதும், காட்சி கால்கோள் முதலியவற்றிற்கு இருபொருள் எழுதியுள்ளதும் மேற்கூறியதனை வலியுறுத்தும். அங்ஙனமிருப்பினும் நச்சர் ஆற்றுப்படைக்கு இலக்கணமாக அமைந்த துறைக்கு, படையியங்கரவம், முதலியவற்றிற்கும் பொருள் கொண்டமைபோன்றும், மாயேன் மேய மன்பெருஞ்சிறப்பிற் றுவா விழுப்புகழ்ப் பூவை நிலையும், என்ற துறைக்குப் பொருள் உரைத்தமைபோன்றும் கூத்தரும் பாணரும் என்றதுறைக்கும் பொருளெழுதிச் சென்றிருப்பின் நலமாம். எங்ஙனமெனின் தாவினல்லிசை என்ற சூத்திரத்து, கிடந்தவாறு ஆற்றொழுக்காகப் பொருள் கூறி கூத்தராற்றுப்படை, பாணாற்றுப்படை, பொருநராற்றுப்படை, விறலியாற்றுப்படை இவைகட்கு அமைத்தலும், ஆற்றிடைக் காட்சி உறழத்தோன்றி பெற்ற பெருவளம் பெறாஅர்க்கறிவுறீஇச் சென்றுபயனெதிரச் சொன்னபக்கமும் எனப்பிரித்து முருகாற்றுப்படைக்கிலக்கணம் அமைத்தலுமாம். இங்ஙனம்கூறின், கூத்தர் பாணர், பொருநர் விறலியர் தம்மினத்தாரை இன்மை நிலையிற் காண்டலால், பெற்று வருவோர்க்கு மாறுபடத்தோன்றுகின்றனராதலின் உறழத் தோன்றி என்றூர் எனக் கூறும் கூற்றிற்கும், வழியிடத்துப் பல காட்சிகளைக் கண்டு சேறலான் ஆற்றிடைக் காட்சி உறழத்தோன்றி என நுவலும் உரைக்கும் முரணுகாமை காண்க.

(தொடரும்.)

# சென்னைத்தமிழிசை மாநாட்டுத் திறப்புவிழாவுரை.

திரு. இராசா. சர். அண்ணாமலைச் செட்டியாரவர்கள்.

அன்பர்களே!

தமிழிசைச் சங்கத்தின் முதல் மாநாட்டை இன்று நடத்துகிறோம். அதைத்திறந்துவைக்கும் பெருமையை எனக்களித்த இசைச் சங்கத்தாருக்கு நன்றி செலுத்துகிறேன். இம் மாநாட்டை மகிழ்ச்சியுடன் திறந்துவைத்து இந்த விழாவில் மகிழ்ச்சியுடன் கலந்து கொள்கிறேன்.

தமிழர் இசையரங்கில் தமிழ்ப்பாடல்கள் முழங்கவேண்டும். தமிழிசையை வளர்த்து உயர்ந்த நிலையில் வைக்கவேண்டும். சங்கத்தின் நோக்கங்களில் இது ஒரு சிறந்த பகுதியாகும். இச் சங்கம் சென்னையைத் தலைமையாகக் கொண்டு, முறையாகத் தொண்டுசெய்து, நமது கலையை வளர்க்கும். தமிழுணர்ச்சியுள்ள எல்லாத்தமிழரும் இதன் கலைத்தொண்டில் பங்குகொள்ளுவது கடமையும் உரிமையுமாகும். தமிழகத்தில் தமிழ் முழக்கம் செய்வதைத் தடைசெய்யும் தமிழன் இருக்கமுடியாது. தமிழிசை புதிதல்ல; தமிழிசையியக்கம் படையெடுப்புமல்ல; தவறுடையதுமாகாது. தமிழ் இந்நாட்டிற்குரியமொழி. தமிழ் இசை இந்நாட்டிற்குரிய இசைச் செல்வம். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தமிழிசை செழித்து வந்தது. தமிழர் இசைச் செல்வமே இந்திய இசைக்குத் தாயூற்றாக இருந்ததென்று தக்கபுலவர் ஆராய்ந்து சொல்லுகின்றனர். தமிழிசை வழிவழியாகப் பெருகிவந்தது. பிறமொழிப் பாடல்கள் மிக அண்மையிலேதான் தோன்றின. பிறமொழிப் பாடல்களில் காதல் கொண்ட சிலர் தடைச்சுவர் எழுப்பினார்கள். இயற்கைக்கு மாறான இத்தடை எத்தனைநாள் நிற்க முடியும்? தாயிடமிருந்து மக்களை எத்தனைநாள் பிரித்துவைக்கமுடியும்? தமிழர் உணர்ச்சி பெற்று எழுந்தனர். தாங்கள் இழந்த செல்வத்தை மீட்டனர். காலச்சுழலில் மறைந்து போன கலைக்கோயிலைக் கண்டுபிடித்தனர். தமிழிசை இயக்கம் ஒளிவிட்டு விளங்குகிறது. நாடு எங்கும் தமிழிசைச் சங்கங்கள் நிறுவப்பெற்றிருக்கின்றன.

தமிழிசைமாநாடுகள் பல இடங்களில் கூடி, "இனித் தமிழிசை யையே போற்றுவோம்" என்று உறுதி செய்கின்றன. இம் மா நாடுகள் தமிழர் உள்ளத்திற்றோன்றிய தமிழிசை ஆர்வத்தைச் சுடரோங்கத் தூண்டுகின்றன. தமிழிசை இயக்கம் தமிழின் மறுமலர்ச்சிக்குப் புதிய வேகத்தைத் தந்தது. இசை மலர்ச்சியே மறு மலர்ச்சி. இன்று தமிழரின் செவிகள் தமிழமுதம் பருகி மகிழ்கின்றன. மறைந்து போன பழம் பாடல்கள் இந்த இயக் கத்தால் புத்துயிர் பெற்று முழங்குகின்றன. புதிய பாடல்கள் எழுந்து இன்பம் தருகின்றன. கவிவாணரும் இசைவாணரும் ஆர்வமுடன் முன்வந்து தமிழிசையை வளர்க்கிறார்கள். இசை யரங்கிற்குக் கூட்டம் கூட்டமாகத் தமிழர்கள் வருகின்றார்கள். தமிழிசை வேறெதற்கும் இளைத்ததல்ல என்பதை இசைவாணர் கள் விளக்கிவிட்டார்கள். அரிய பெரிய ஆவேசக் கவிஞர்கள் தமிழ்ப்பாடல்கள் பாடியிருக்கிறார்கள். கண்ணிருப்பவர் தமி ழிசைக்குள்ள பொது மக்கள் ஆதரவைக் காணலாம். காதிருப்பவர் எத்திசையும் தமிழிசை கேட்டு இன்புறலாம். மிகவிரைவில் தமி ழிசைக்கலை உச்சநிலையில் ஓங்கி விளங்கப்போகிறது. நமது தமிழ் மொழிக்கு நலம் தரும் இந்த இயக்கத்திற்கும் எதிர்ப்பும் இடர் களும் முளைத்தன. ஆனால் தமிழிசை வேகத்தில் அவ்விடர்கள் தகர்ந்து போயின, எனினும் இன்னும் வீண்வாதங்களும் பிடி வாதங்களும் சிற்சில இடங்களில் காணப்படுகின்றன. தமி ழிசை எதிர்ப்பாளர் வியப்பிற்குரிய குறுக்கு வாதங்களைக் கிளப்பிக் கூச்சலிட்டனர். பத்திபத்தியாகச் செய்தித்தாள்களை நிரப்பினர். "தமிழ், இசைக்குத் தகுந்ததல்ல. தெலுங்கு வட மொழிகளிலுள்ள நயம் தமிழிற்கு வாராது. இசைக்கு மொழி வேறுபாடில்லை. அது நாதவித்தை. அதில் மொழி வேறு பாட்டைப் புகுத்தக் கூடாது. தமிழில் பாடினால் கலைநயம் கெடும். இசையின் மாற்று குறையும். மதிப்பு கெடும். பாட்டு அருளால் வரும். பொருளால் வாராது. ஏதோசிலர் பணத் தைக் கொட்டி இசையைத் தமிழாக்கப் பார்க்கிறார்கள். அது கர்நாடக இசையைக் காலைவாரி அடித்துவிடும். தமிழில் உயர்ந்த பாடல்கள் இல்லை" இவையே எதிர்ப்பாளர்கள் கிளப்பிய குறுக்கு வாதங்கள். இவ்வாதங்கள் இப்போது மறைந்து வருகின்றன. இன்று தமிழில் மிகுதியான பாடல்கள் வெளி வந்து முழங்குகின்றன. இசைக்கு வேண்டிய நயங்களெல்லாம் தமிழ்ப்பாடல்களிலிருப்பதைக் கண்டும் கேட்டும் இன்புறுகின் றோம். மிகச்சிறந்த தெலுங்கு வண்ணங்களைப் போலவே தமிழில் பலவண்ணங்கள் வழங்குகின்றன. ஆயுளெல்லாம் பாடிக்கொண்டிருக்கலாம். தமிழிசை அமுதவெள்ளம் என்பதை இன்று நம் உள்ளம் உணர்ந்து சொல்லுகிறது. இக்காலத்துச் சிறந்த புலவர்களும் இதையே சொல்லுகிறார்கள். எதிர்ப்

பாளரும் இதை உணர்ந்துதான் வருகின்றனர். ததும்பிய உணர்ச்சியின் பயனே இசையாகும். உணர்ச்சி பெருகப்பாடல்கள் பிறக்கும். இதைச் சர். எஸ். இராதாகிருட்டினன் அவர்கள் நேற்று இசைப்பேரவையில் (Music Academy) வெகு அழகாக எடுத்துரைத்தார்கள். முதிர்ந்த பயிற்சியும் ஆழ்ந்த நோக்கமும் உண்டானால் உயர்ந்த இசைபிறக்கும்; இல்லையேல் அழகான ஒலிப்போலிகளும், மரபு முறையில் மெட்டுக்களுந் தான் எஞ்சும் என்று சொன்னார்கள், உணர்ச்சியின் பயனாகவே வால்மீகி முனிவரிடமிருந்து சுலோகம் வெளிவர, இராமாயணமும் தோன்றிற்று என்று எடுத்துக்காட்டினார்கள். இதுவே திரு. டி. வி. சுப்புராவு அவர்கள், இசைக்கு மொழி முதன்மையானதல்ல. ஒலியே முதன்மையானது என்று பேரவையில் சொன்னதற்குச் சரியான மறுப்பாகும். நமக்கு வேண்டியது ஒலிப்போலி அல்ல; விரிவான மெட்டுக்கள் அல்ல; உணர்ச்சி ததும்பும் பாடல்களைத்தான் நாம் விரும்புகிறோம். சுப்புராவு அவர்கள் கட்சிவேகத்தால் சிறிது மயக்கம் அடைந்து கோணலான ஒரு அளவு கோலால் இசையை அளந்ததன் பயனாக அழகிற்கு உதவியான செய்தி, அவர் கண்ணிற்கு இழிவாகப் படுகிறது. இவ்விதமான வாதங்கள் வெகுவாக மறைந்து வருகின்றன, ஆனால் சிலரிடமுள்ள பிடிவாதம் இன்னொரு குறுக்குச்சால் ஓட்டியது. தமிழிசை இயக்கம் ஒரு சாதி இயக்கம்; அரசியற் சதுரங்கம் என்ற வாதத்தைக் கிளப்பியது. அன்பர்களே! **தமிழிசை யியக்கம் தூய கலையியக்கமே.** அதில் அரசியற் கலப்பே இல்லை. சாதிப்பித்தமும் இல்லை. வடமொழியையோ, தெலுங்கையோ நாம் வெறுக்கவில்லை. மற்ற மொழியாளர் தமது தாய்மொழிப் பாட்டையே போற்றுவது போலத் தமிழர் தமிழ்ப் பாடல்களைப் போற்ற வேண்டுமென்கிறோம். **தமிழிசை இயக்கம் அரசியற் சூழ்ச்சி இல்லை யென்பதை அழுத்தமாகச்சொல்லுகிறேன்.** இவ்வியக்கம் சாதிப்பிரிவினையை வளர்ப்பதல்ல. அதற்கு மாறாக இவ்வியக்கம் சாதிமதக்கட்சி பேதமில்லாமல் யாரையும் பண்புடன் பழகச்செய்யும் ஒற்றுமையியக்கமாகும். தமிழிசையில் எவ்விதமான வேறுபாடுமில்லாமல் தமிழர் உள்ளமெல்லாம் ஒன்றுபட்டிருக்கிறது. இந்தக் கலை ஒற்றுமை நாட்டின் ஒற்றுமைக்கு அரிய துணையாகும் என்பதை வற்புறுத்துகின்றேன். இசையை அதன் உயர்ந்த பதவியிலிருந்து கீழே இறக்கி, அரசியல் வாதங்களுக்கோ வேறு எவ்விதமான கட்சிகளுக்கோ உபயோகப்படுத்தினால் அஃது இழிந்த பரப்புதற்றன்மையுளதும், குறுகியதும், சாரமற்றதும், கபடமானதுமான காரியமாகும் என்று நேற்று இசைப்பேரவையில் சர். எஸ். இராதாகிருட்டினன் அவர்கள் இயம்பினார்கள்.

அஃதாவது :—

> When it is prostituted to serve ephemeral and irrelevant ends, it is not music, it is propoganda, narrow, arid and hypocritical

இது மிகவும் முறையானதேயாகும். தமிழிசைச் சங்கத்தார் தொடர்பு கொண்டுள்ளவரையில், இவ்வித எண்ணங்கள் அவர்களுக்குச்சிறிதேனும் கிடையா. யாராயிருந்தாலும்சரி, அரசியற்றுறையிலுள்ள ஒருகட்சியார், மற்றொரு கட்சியாரைக் கண்டிக்க இசையை ஒரு கருவியாகப் பயன்படுத்துவார்களே யானல் அவர்களுக்கு சர். எஸ். இராதாகிருட்டினன் அவர்கள் இயம்பிய சொற்கள் முற்றிலும் பொருந்தும். தமிழிசை இயக்கத்தால் பண்டைக்காலம் தொட்டு வழங்கிய பழம்பாடல்கள் எல்லாம் இன்று உயிர் பெற்று எழுந்து முழங்குகின்றன. மிகுதியான புதிய பாடல்கள் தமிழிசையின் பெருமையை விளக்கி ஒலிக்கின்றன. நமது தமிழிசை இன்னும் நயம் பெற்று உலகம் வியக்க முன்னேறும் அறிகுறிகள் காணப் பெறுகின்றன. காலத்தை வீணுக்கும் எதிர்ப்பு வாதங்கள் பயனற்றுப் போயின. தமிழிசையை ஆந்திரர் எதிர்க்கவில்லை. அவர்கள் தமிழிசையைத் தமிழர்களுக்கே விட்டு விட்டுத் தமது பாட்டைப் பார்க்கின்றனர். தமிழிசையைத் தமிழரிற் சிலரே எதிர்த்துப் போராடுகின்றனர். இதுதான் வருந்தத்தக்கது. இப்படி எதிர்ப்பவர் உள்ளத்தில், "நமது இசைப்புலவர்கள் பழகிய தெலுங்கிசை வீணுகுமே,அவர்களுக்கு ஆதரவு குறையுமே" என்றஅச்சமும் ஐயமும் குடிகொண்டிருக்கின்றன. அவர்கள் மனதிலுள்ள இசைப் புலவர்கள் தமது அறிவையும் முயற்சியையும் தமிழிசை வளர்ச்சியில் செலுத்தட்டும். அவ்விதம் செய்வார்களானல் இப்பொழுதுள்ள அச்சமும் ஐயமும் நீங்கிவிடும். தமிழ் அவர்களது தாய்மொழி. பிறமொழியைவிடத் தாய்மொழியில் அவர்கள் எளிதாகத்தங்கள் புலமையைக் காட்டலாம். அப்பொழுது தமிழர் அவர்களை வரவேற்று மகிழ்வுடன் ஆதரிப்பார்கள். கலையும்செழிக்கும். மற்றோரிடர் சிலசெய்தித்தாள்களால் வந்தது. அவை தமிழிசை எதிர்ப்பாளருக்கே இடமளித்தன. தமிழிசையாளர் பேச்சை ஆதரிப்பதுவுமில்லை. வெளியிடுவதுமில்லை. வெளியிட்டாலும் அங்கும் இங்கும் விலக்கிச் செய்திகளைத் தங்கள் விருப்பப்படி வெளியிடுகின்றன. இது முறையல்ல. இதுபோன்ற காரியங்கள் மிகவருந்தத்தக்கவை. செய்தித் தாள்கள், எல்லாவற்றையும் சமமாகக் கருத வேண்டுகின்றேன். மற்றொரு புறம் இசையரண்மனையிலிருந்து பொதுமக்கள் ஆக்கத்திற்கு வந்துவிட்டதென்ற பேச்சைக்கேட்கிறோம். "இசை சிலருடைய தனியுரிமையாக இருந்தது. இப்போது பொது உரிமையாகி விட்டது. எல்லோரும் பாட்டிசை

க்கின்றனர். எல்லாச் செவிகளும் பாட்டைக் கேட்கின்றன. பாட்டிற்குக் கூட்டம் பெருகிவிட்டது. பாடுவோரும் பெருகி விட்டனர்" என்று சிலர் சொல்லுகின்றனர். **இசை எவர் மிராசு மல்ல. தமிழிசை தமிழரின் பொதுச் செல்வம். அதைப் பயிலவும் பாடவும் வல்லவருக்கெல்லாம் அதுபொதுவாகும்.** இவ்வியக்கத்தில் பங்கு கொண்டு "இன்னது பிழை" யென்று திருத்தி இசைப் பண்பை உயர்த்தப் பாடுபடும் புலவர்களைத் தமிழ்மக்கள் மகிழ் வுடன் போற்றுவார்கள். **இசைக்கலையால் நமது நாடு முழுவதும் ஒன்று பட இடமுண்டு. தமிழர் அனைவரும் கலைக்கோயிலில் அன்பு மயமாக விளங்கும் நாளே தமிழர் நன்னாளாகும். அந்நாளை நான் ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.** தமிழ்க்கலை அந்நாளை நோக்கியே உலாச்செல்கிறது. அவ்வுலாவில் பொதுநோக்குடன் எல்லாத் தமிழரும் சேர்ந்து உதவ வேண்டும். எல்லா இசைவாணரும் தமிழிசையை ஆதரித்து அவ்வுலாவிற்கு ஊக்கமளிக்கவேண்டும். இவ்வாறு கலையுலாவில் நாம் மன ஒற்றுமையுடன் சென்றால் வெறுப்பும் வேறுபாடு மொழிந்து நமது சமுதாயவாழ்வு அமைதி யும் இன்பமும் அடையும் என்பது உறுதி. அன்பர்களே! தமி ழிசைச் சங்கத்தின் நோக்கம் இன்னதென்பதைத் தெளிவாகச் சொல்லி என் பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன். தமிழ் நாட் டில் நடக்கும் இசையரங்குகளில் தமிழ்ப் பாடல்களே முதன்மை பெறவேண்டும். இசையரங்கின் தொடக்கமும் முடிவும் தமிழ்ப் பாட்டுக்களாக இருக்கவேண்டும். இசையரங்கிற் பெரும் பகுதி தமிழ்ப்பாடல்களாக இருக்கவேண்டும். இடையிடையே பிற மொழிப்பாடல்களையும் பாடலாம். அதற்குத் தடையில்லை. பிற மொழிப்பாடல்களை நாம் வெறுக்கவில்லை. தமிழ்நாட்டில் நடக் கும் இசையைக்கேட்கும் தமிழர் உள்ளம், "இன்று தமிழிசை அரங்கு நடந்தது; நம்உள்ளம் தமிழிசையால் நிறைவெய்தியது" என்று உணரவேண்டும். தமிழ்நாட்டில் நடக்கும் இசையரங்கு தமிழருக்கு இன்பமளிக்கவேண்டும். இது தான் நமது நோக்கம். இம்மாநாட்டின் இசை நிகழ்ச்சியில் எல்லா வகுப்பு இசைப் புலவர்களும் காணப்பெறுகின்றனர். பிறமொழிப் பாடல்களும் காணப்பெறுகின்றன. சாதிவேற்றுமையோ மொழி வேற்றுமை யோ இங்குஇல்லை. தமிழர் எல்லோரும் சமமானவர்களே, இந்த உணர்ச்சியுடன் நாம் ஒன்று கூடிக்கலையை வளர்த்தால் மன வேறுபாடும் இனவேறுபாடும்ஒழியும். ஆகையால் அன்பர்களே! தமிழ்நாட்டில் பிறந்து வளர்ந்து தமிழ்பேசும் மக்களாகிய எல்லோரும் ஒரேமனதுடன் நம் தாய்மொழியாகிய தமிழிசைக் கலையை ஆதரித்துப் போற்றுவோமாக!

# தமிழ்நாட்டு நாடகக் கலை வளர்ச்சி மா நாட்டுத்தலைமையுரையின் சுருக்கம்.

திரு. சர். R. K. சண்முகம் செட்டியாரவர்கள்.

நண்பர்களே! நகரமன்றத் தலைவரவர்களே!

**ந**மதுநாட்டிலே நாடகக் காரர்களைக் கூத்தாடிகள் என்று கேலியாகப் பேசுகிறார்கள். மேனாடுகளிலே, அவர்களைப்பாராட்டு கிறார்கள். நகரமன்றங்கள் நாடகக் கலைக்காக அங்கு உதவி செய்கின்றன. மேனாடுகளிலே காணப்படும் பெரிய கொட்டில் கள் (தியேட்டர்கள்) நகர மன்றங்களுக்கு உரிமையானவைகளே. "பாரிஸ்" பட்டினத்திற்குள்ள பெரிய அருமையான நாடகக் கொட்டகை அவ்வூர் நகர மன்றத்திற்கு உரிமையுள்ள கட்டிடம். அதுபோலவே மேனாடுகளில் மற்ற இடங்களிலும் விலையுயர்ந்த நாடகக்கொட்டகைகள், நாட்டியசாலைகள் எல்லாம் நகர மன் றங்களுக்கு உரிமையானவைகள். இனி நம் நாட்டிலும் நகர மன்றங்கள் நாடகக் கலைக்கு ஆதரவுதரும் என்று நம்பு கின்றேன்.

நாடகக்கலையென்பது நமது தமிழ்நாட்டிலே பழமையானது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இருந்தது. இன்று சிலர் நாடகம் என்ற சொல்கூட, தமிழ் இல்லையென்றும் வடமொழிச் சொல் என்றும் கருதுகின்றார்கள். சமஸ்கிருதம், என்றாலே, செம்மை செய்யப்பெற்ற மொழியென்றுதான் பொருள். ஆரியர்கள் இங்கு வரும்போது வடமொழியை வளமான ஒரு மொழி யாகக்கொண்டுவரவில்லை. தமிழ்மொழியிடமும், தமிழ்க்கலையிடமும், பல கருத்துக்களைப் பெற்றுத் தங்கள் மொழியை வளர்த்துக் கொண்டனர். அங்ஙனம் செம்மைச் செய்யப்பெற்ற மொழியே சமஸ்கிருதம் என்று பெயர் பெற்றது. சிலர் எதைப்பார்த்தாலும் இஃது ஆரியமொழியிலிருந்து வந்தது, இஃது ஆரியக்கலையென்று கூறித் தமிழருக்கு இழிவு தேடுகிறார்கள். நாடகம் என்ற சொல் நடையென்ற தமிழ்ச்சொல்லின் கருத்தைக்கொண்டது. இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பு இயற்றப்பட்ட சிலப்பதி காரத்திலே நாடகக்கலை இருக்கிறது. பழங்காலத்திலே நாடகங் களை மூன்று வகைகளாகப் பிரித்திருந்தனர். ஒன்று பத்திச் சுவையான புராணக் கதைகள். இவைகளைக் கோயில்களிலே நடத்தி வந்தார்கள். மற்றொன்று வீரர் வரலாறு. இஃது அரசர்

கள் முன்னிலையில் மாளிகைகளில் நடிக்கப்பட்டது. மூன்றுவது அறிவு வளர்ச்சிக் கதைகள். இவைகளை மக்கள் முன்னிலையில் நடத்திவந்தார்கள். இப்போது நாடகங்கள்யாவும் புராணக்கதைகளாக உள்ளன. நாரதர் வந்துவந்துபோகாதநாடகமேகாணேம். அவைகளைக் காணும்போது இன்பமாகத்தான் இருக்கின்றன. புதிய கருத்துள்ள சீர்திருத்த நாடகங்கள் நடத்தல் வேண்டும். புராணங்களிலே பொய் மொழிகள் உள்ளன. இராமாயணம், பாரதம் போன்றவைகள் புராணப் பொய்கள் என்பதில் ஐயமில்லை. இதைவிட மிகுதியான பொய்கள் இலியட்டிலும், ஓடிசியிலும் உள்ளன. நான் மக்களிடையே உள்ள மூடப் பழக்க வழக்கங்கள் போகவேண்டுமென்று முன்பெல்லாம் பேசியவன்தான். இப்போதும் எனக்கு அதுதான் கருத்து. ஆனல் இந்தப் புராணங்களில் கலையழகும் இருக்கிறது. சிலர் இப்புராணங்களை எரித்துவிட வேண்டுமென்று கூறுகிருர்கள். இவைகளை எரித்துவிட்டால் மக்களிடமுள்ள மூடப் பழக்கவழக்கங்கள் போய்விடுமா? போய்விடுவதானல் விறகுப் பஞ்சமுள்ள இந்த நாட்களிலே அவைகளை எரித்துக்கூட விடலாம். மக்களிடையே இம் மூடப்பழக்க வழக்கங்கள் ஒழியும்படியான அறிவை உண்டாக்கவேண்டும். படையெடுப்பின்போது ஒரு அரசன் படிப்பகம் ஒன்றை எரித்தானும். எரித்த அவன் "கொரானி" லிருக்கும் உண்மைகளே உலகுக்குப் போதியவை. வேறு புத்தகங்கள் வேண்டாம். படிப்பகம் தேவையில்லை. இந்தப் படிப்பகத்தேயுள்ள நூல்களிலே காணப்படும் எல்லா அறிவும் "கொரான்" ஒன்றிலே காணப்பெறுகின்றன. ஆகவே வேறு நூல் தேவையில்லை. கொரானுக்கு மாறுபாடான கருத்துக்கள் இந்நூல்களிலே இருக்குமானல் அவை இருக்கக்கூடா என்று சொன்னனும். அதைப்போலப் பழம் நூல்களை எரித்துவிட்டால், பிறகு நமக்கென என்ன நூல் இருக்கும்? இந்த நூல்களைப்பற்றி நோக்கும்போது அந்தக்காலத்துக் கருத்தை நோக்கவேண்டும். சிலப்பதிகாரத்தின் சுவையை உணரவேண்டுமானல் அஃது எழுதப்பட்ட காலமாகிய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்த கண்ணேடும் மனத்தோடும் பார்த்தால்தான் சுவை தெரியும். அறிவு ஒன்று மட்டுமே போதும் என்று இருக்க முடியாது. உள்ளத்திலே வேறு உணர்ச்சிகளும் வேண்டியிருக்கின்றன. இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பு இயற்றப்பட்ட சிலப்பதிகாரத்திலே, அரங்கேற்றுகாதையிலே நாடகமேடையின் அமைப்புக்கூடச் சரியாகக் கூறப்பட்டிருக்கிறது. இத்துணை கோல் நீளத்தில், இத்துணை கோல் அகலத்தில், இவ்வளவு உயரமுள்ளதாக நடனமேடை இருக்கவேண்டுமென்று அதிலே சொல்லப்பட்டிருக்கிறது. கோல் என்ருல் என்ன என்று யான் மலையாள நாட்டினரைக் கேட்டேன். அவர்கள் அந்த அளவைக் கூறி

ணுர்கள். இன்னும் அவர்களில் சில அளவு முறையிலே கோல் கணக்கேதான் இருக்கிறது. பழைய காலத்திலேயே நாடகக்கலை இங்கு இருந்திருக்கிறது. நாட்டியத்தை யாம் இன்று பரத நாட்டியமென்று கூறுகிறோம். நாட்டியக்கலையே பரதன் என்பவன் எழுதிய நூலை ஆதாரமாகக் கொண்டதென்று சிலர் கூறுகின்றனர். தமிழ் நாட்டிலே நாட்டியத்திற்குப் பரத நாட்டியமென்று பெயர் வருவானேன்? தமிழருக்கு என்று நடனநூல் இருந்ததில்லையா? என்று யான் எண்ணினேன். பரதம் என்ற சொல் எப்பொழுது வந்தது என்று ஆராய்ந்தேன். சுமார் இருபத்தைந்து ஆண்டுகளாகத்தான் இப்பரத நாட்டியம் என்ற சொல் வழங்குகிறது. சென்னையிலே இசைப்பேரவை (Music Academy) போன்றவைகள் தோன்றிய பிறகே பரதநாட்டியம் என்ற சொல் ஆட்சிபெற்றது. முன்பெல்லாம் அதனைச் "சதிர்க்கச்சேரி" என்றே சொல்லி வந்தார்கள். பரதம் எழுதப்பட்டு சுமார் ஆயிரம் ஆண்டுகளே ஆகும். சிலப்பதிகாரம் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே எழுதப்பட்டது. எனவே பரத நாட்டிய நூல் தோன்றுவதற்கு முன்பே தமிழ் நாட்டிலே நாட்டியக் கலை வளர்ச்சியடைந்திருந்தது. பழங்காலத்திலிருந்து வாழ்ந்துவரும் இந்நாடகக் கலையை மேலும் வளர்ச்சியடையச்செய்யவே இன்று இந்த மாநாடு நடைபெறுகிறது.

நாடகத்தொழிலிலே ஈடுபட்டுள்ளவர்களுக்கு நல்ல ஊதியம் தரப்படவேண்டுமென்று பலர் பேசினுர்கள். இது மிக இன்றியமையாததாகும். நாடகக்காரர் என்ருல் முன்பெல்லாம் மதிப்பு இருந்ததில்லை. அஃது இப்போது மாறிவிட்டது. நடிகர்கள் பொதுத் தொண்டு செய்பவர்கள் என்ற எண்ணம் வளர்ந்திருக்கிறது. இது மிக நல்லது. பட்டங்கள் வழங்கும் ஆட்சியுரிமையை அரசியலார் எனக்கு அளித்தால் நான், சர், திவான் பகதூர் போன்ற பட்டங்களை நம்முடைய நடிகர்களுக்கு அளிப்பேன். மேனுடுகளிலே சிறந்த நடிகர்களின் தொண்டு பாராட்டப் பெற்று அவர்களுக்குயர்ந்த பட்டங்களும் அளிக்கப் பட்டுள்ளன. நாடகங்களிலே புராணங்களே இன்று கதைப் பகுதிகளாக அமைந்துள்ளன. இது மாறவேண்டியதுதான். வாழ்க்கையைச்சித்தரிக்கும் புதிய சீர்திருத்த நாடகங்கள் நடத்தப் பெறல்வேண்டும். செகப்பிரியர் அருமையான நாடகங்கள் எழுதியிருக்கிருர் என்றபோதிலும் இப்பொழுது "இலந்தன்" (London) மாநகர்க் கொட்டகைகளிலே அந்த நாடகங்களையே நடத்திக்கொண்டிருக்கிருர்களா? புதிய இப்பொழுது எழுதப்பட்ட நாடகங்களை நடத்துகிருர்களா? வெறும் புராணக்கதைகளாக நாடகங்கள் இருந்து பயனில்லை. வாழ்க்கையைச் சித்தரிக்கவேண்டியதுதானே நாடகத்தின் கருத்து.

(தொடர்ச்சி 246-ம் பக்கம் பார்க்க.)